# மின்தடை போன்ற நெருக்கடிகளை சமாளிக்க இரண்டு வாரப் பயிற்சி

அனுஷா செல்வமணி

நெருக்கடிகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்ளும்படியான விழிப்புணர்வை சிங்கப்பூரர்களிடம் ஏற்படுத்த சென்ற ஆண்டு 'எக்சர்சைஸ் எஸ்ஜி ரெடி' எனும் திட்டம் தொடங்கப்பட்டது.

அத்திட்டம் மீண்டும் இவ்வாண்டு முழுமைத் தற்காப்புப் பயிற்சியுடன் இணைந்து இடம்பெறவிருக்கிறது.

'இடையூறுகளுக்கு நீ தயாரா' என்ற கருப்பொருளுடன், மின்தடையில் கவனம் செலுத்தும் வண்ணம், இணையப் பாதுகாப்பு, சமூகத்தின்மீது அக்கறை ஆகிய அம்சங்களுடன் தற்காப்பு அமைச்சு இப்பயிற்சியை எரிசக்திச் சந்தை ஆணையத்துடன் இணைந்து நடத்தவுள்ளது.

எஸ்ஜி60 கொண்டாட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகக் கருதப்படும் இப்பயிற்சி கடந்த 60 ஆண்டுகளில் சிங்கப்பூர் எதிர்நோக்கிய இடையூறுகள், நெருக்கடிகள், முன்னோக்கிச் செல்லும் வேளையில் சிங்கப்பூர் என்னென்ன சவால்களைச் சந்திக்கும் ஆகியவற்றைப் பற்றி சிங்கப்பூரர்களைச் சிந்திக்க அழைப்பது மட்டுமன்றி, இதுபோன்ற சவால்மிக்க நேரத்தில் சிங்கப்பூரர்கள் பிறர்மீது அக்கறை செலுத்தும் வாய்ப்பாகவும் அமையும்.

மின்சார அமைப்புக் கட்டுப்பாட்டு நிலையத்தில் வெள்ளிக்கிழமை காலை (ஜனவரி 24) இடம்பெற்ற செய்தியாளர் கூட்டத்தில் இத்தகவல்கள் பகிரப்பட்டன.



நடமாடும் மின்னாக்கியை நிறுவுவது குறித்துச் செய்துகாட்டிய எஸ்பி குழுமப் பணியாளர்கள். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

முழுமைத் தற்காப்பு பயிற்சியை முன்னிட்டு அடுத்த மாதம் 15ஆம் தேதி தொடங்கி, 28ஆம் தேதி நிறைவுபெறும் இந்த இரண்டு வாரப் பயிற்சியில் 800க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் பள்ளிகளும் வெவ்வேறு இடையூறு, நெருக்கடி உண்டாக்கும் பாவனை நடவடிக்கைகளைச் செயல்படுத்த உள்ளன.

நெக்சஸ் செயலகம் இணைய வழித் தகவல் திருட்டு எவ்வாறு பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பது குறித்த காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் https://go.gov.sg/sgreadyvideo இணையத்தளம் மூலம் அக்காணொளியைப் பார்த்து, நெருக்கடியான சூழ்நிலைகளை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை அறிந்துகொள்ளலாம்.

https://go.gov.sg/sgreadygowhere இணையத்தளம் மூலம் பொதுமக்கள் நடவடிக்கைகளை ஒட்டிய மேல்விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

இந்த இருவார காலகட்டத்தில் பல்வேறு பள்ளிகள், பொது அமைப்புகள், சமூக, நிர்வாக நிறுவனங்கள் பாவனைப் பயிற்சிகளை செயல்படுத்தவுள்ளன. சிங்கப்பூர்க் கட்டமைப்பை உருக்குலைக்கவல்ல பெரிய அளவிலான பாவனைப் பயிற்சி மேற்கொள்ளப்படும்.

இணையத் தாக்குதலால் ஏற்படும் மின்தடை பாவனைப் பயிற்சி உச்ச நீதிமன்றம், சிங்கப்பூர் நிர்வாக பல்கலைக்கழகம், மத்திய தீயணைப்பு நிலையம் போன்ற 20க்கும் மேற்பட்ட முக்கியக் கட்டடங்களில் நடத்தப்படும். ரயில் சேவை செயல்படாத நேரத்தில் சிட்டிஹால், புதிதாகத் திறக்கப்படவுள்ள ஹியூம் (Hume) ஆகிய இரு ரயில் நிலையங்களில் மின்தடை ஏற்படுவது போன்ற பாவனைப் பயிற்சி மேற்கொள்ளப்படும்.

பின்னிரவு 1 மணியிலிருந்து 3.30 மணிவரை அங்கு நடத்தப்படும் பயிற்சியில் 300 சமூகப் பங்கேற்பாளர்கள் கலந்துகொள்வர். இணையத் தாக்குதலால் ஏற்படும் மின்தடைச் சூழலால் மக்கள் எவ்வாறு ரயில் நிலையங்களிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்படுவார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் இந்தப் பயிற்சி நடத்தப்படும்.

sanush@sph.com.sg